Judicial Form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

**Sessions Case No. 17 of 2021**

**Deposition of P.W.13 witness for Prosecution**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.செந்தில்குமார் | Taluk | : | |
| Father's/ Husband's Name | : | | Calling | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th day of September 2024.

(Accused present)

**முதல்நிலை விசாரணை**:

நான் தற்போது நல்லூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.1.2015ந் தேதி காலை 10.05 மணிக்கு பரமத்தி காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியிலிருந்த போது பரமத்தி காவல் நிலைய குற்ற எண்.15/2015 சட்டப்பிரிவு 304 இதச வழக்கில் இறந்து போன குப்புசாமி என்பவர் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக காவல் ஆய்வாளரிடம் வேண்டுகோள் கடிதம் பெற்று நாமக்கல் அரசு மருத்துவமனை அலுவல் மருத்துவரிடம் வேண்டுகோள் கடிதம் வழங்கி பிரேத பரிசோதனை முடிந்த பிறகு குப்புசாமியின் மகன் வருதராஜ் என்பவரிடம் பிரேதத்தை ஒப்படைத்தேன். பின்னர் 19.3.2015ந் தேதி பரமத்தி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் கடிதம் பெற்று மேற்படி குப்புசாமி உடல் உள்ளுறுப்புகளை 20.3.2015ந் தேதி சென்னை தடய அறிவியல் ஆய்வக கூடத்தில் ஒப்படைத்து நிலையம் வந்து அறிக்கை செய்தேன். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**:**

நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் ஆவணங்களை சமர்ப்பிக்கவில்லை என்றால் சரியல்ல. மேல் அதிகாரி கேட்டுக் கொண்டதன் பேரில் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.